**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**STC. No.1 /2022 PW6 .**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுரேந்திரன் | தந்தை/கணவர் பெயர்: | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : சார்பு ஆய்வாளர் |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.11.2025

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**13.11.2025 முதல் விசாரணை:**

1. நான் தற்போது மதுரை மாவட்டம் Q பிரிவு குற்றபுலனாய்வு துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.11.2019 ம்தேதி எஸ்.எஸ் கோட்டை காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சை யில் இருந்த அ.சா.1 யை விசாரித்து அவர் கொடுத்த புகார் மனுவை பெற்று காலை 11.00 மணிக்கு காவல் நிலைய குற்ற எண் 81/2019 இதச பிரிவுகள் 279, 337 ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 என குறியீடு செய்யப்படுகிறது. வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 11.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் சண்முகம், அலெக்ஸ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் தயார் செய்து பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(அந்த மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ – 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையானவர்களை விசாரிணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை காவல் நிலையத்தில் வைத்து கைது செய்து தக்க இருநபர் ஜாமீனில் பிணையில் விடுவித்தேன். 23.11.2019 ம் தேதி விபத்தில் சம்மந்தபட்ட வாகனம் அசோக் லைலாண்ட் பதிவு எண் டி.என் 68 என் 0901 வாகனத்தை சிவகங்கை மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 தணிக்கைக்கு அனுப்பி வைத்தேன்.

பின்னர் 29.11.2019ம் தேதி விபத்தில் சம்மந்தப்பட்ட மற்றொரு வாகனம் பதிவு எண் டி.என் 58 எஸ் 6123 பொலிரோ வாகனத்தை சிவகங்கை மோட்டா வாகனம் ஆய்வாளர் நிலை 1 தணிக்கைக்கு அனுப்பி வைத்து அன்றைய தினமே அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் முறையே **அ.த.சா.ஆ–5, 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27.01.2020ம் தேதி சாட்சி பாண்டி, காளிதாஸ், மலுவேந்தி , பழனிகுமார் ஆகியோர்களை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே நான் பணிமாறுதலில் சென்று விட்டதால் வழக்குகோப்பை சார்பு ஆய்வாளர் நடராஜன் அவர்களிடம் ஒப்படைத்தேன். ( அ.தசா.ஆ –5 , அ.த.சா.ஆ–6 ஆகிய ஆவணங்கள் அரசு தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 294 இன் கீழ் மனு தாக்கல் செய்து எதிர் தரப்பு ஆட்சேபணை இன்றி குறீயீடு செய்யப்படுகிறது.)

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

2. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடம் தென் வடலாக வந்து கிழக்கே திரும்பும் பகுதி என்றால் சரிதான். இந்த வளைவில் தான் சம்பவம் என்றால் சரிதான். இந்த வளைவின் இரண்டு புறமான வடக்கே தெற்கே வீடுகள் இருக்கா என்றால் ஆங்காங்கே வீடுகள் உள்ளன. சம்பவ நடந்த இடத்திலே தெற்கு புறத்தில் ராமகிருஷ்ணன், சக்திவேல் ஆகியோர் வீடு உள்ளது என்றால் ஞாபகமில்லை. நான் தயார் செய்த வரைபடத்தில் தேதி இல்லை என்றால் சரிதான். பார்வை மகஜரில் குறிப்பிட்டு உள்ளேன். வீடுகள் ரோட்டில் இருபுறமும் உள்ளது என்பதை வரைபடத்தில் காட்டவில்லை என்றால் சரியல்ல. அந்த இரண்டு வாகனம் சம்பவத்தன்று எந்த இடத்தில் இருந்தது என்று காண்பிக்கவில்லை என்றால் சரிதான். இந்த இரண்டு வாகனங்களும் நேருக்கு நேராக மோதிகொள்ளவில்லை என்றால் சரிதான். இந்த சம்பவத்திற்கு முன்னால் பேருந்தை கடந்து 50 அடி துாரத்தில் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றாலும், பார்வை மகஜர் , மாதிரிவரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு போகும் போது இரண்டு வாகனங்களும் அங்கு இல்லை என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த தவறான புகாரை பெற்று தவறாக விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.1 அதிவேகமாக வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.